## யோவான் / John 1:1-4

1. ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது.
2. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார்.
3. சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை.
4. அவருக்குள் ஜீவன் இருந்தது, அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது.

1. In the beginning was the Word, and the Word was with God, and the Word was God.
2. He was with God in the beginning.
3. Through him all things were made; without him nothing was made that has been made.
4. In him was life, and that life was the light of men.

தேவன் எப்பொழுதும் இருக்கிறவர். தேவனாக இருக்கிற வார்த்தையும் எப்பொழுதும் இருக்கிறது.
தேவன் உண்டாக்கப்படவில்லை தேவன் எல்லாவற்றையும் உண்டாக்கினார்.
அந்த தேவனே கிறிஸ்துவாக இந்த உலகத்தில் வந்தார். அவருக்குள் ஜீவன் இருந்தது.
அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாக இருந்தது. அந்த ஒளி மெய்யான ஒளி.
God and the word of God are present always. God is not created. But God created everything.
The God came to this world as Christ and life in HIM. That light is the true light gives life to all men.

## யோவான் / John 1:9

உலகத்திலே வந்த எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி.
The true light that gives light to every man was coming into the world.

உலகத்திலே எவ்வளவோ வார்த்தைகள் உள்ளன. பல மிகவும் அருமையானவைகள்.
அவைகள் கடவுள் கொடுத்த ஞானத்தினாலே, மனிதன் படைத்த வார்த்தைகள்.
அவைகள் இந்த உலக வாழ்க்கைக்கு ஓரளவிற்கு உதவினாலும், இந்த வாழ்க்கைக்குப்பிறகும் வாழக்கூடிய நம் ஆத்மீக வாழ்வுக்கு உதவ முடியாது.

உலகத்தில் ஒருசில மனுஷனை பிரகாசிப்பிக்கிற ஒளிகளைப் பார்க்கலாம்.
அதுவும் நம் ஆத்மீக வாழ்க்கைக்கு உதவக்கூடிய ஒளியாக இருக்காது.

There are plenty of words in this world written by human being. Many are great words.
Those are written by their special wisdom given by God. But these words cannot give any help for us to our Eternal Life.

There are lights in this world through some people. These are NOT for our eternal Life.

தேவனாகிய கிறிஸ்துவே, நித்திய ஜீவனுள்ள வார்த்தையாக இப்பொழுது நம்மிடத்தில் இருக்கிறது.
The words of eternal life- Bible which is the Lord Jesus Christ is with us now.

> அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார். (யோவான் 1:12)
> But as many as received Him, to them He gave the right to become children of God, to those who believe in His name: (John 1:12)

இந்த ஜீவனுள்ள வார்த்தைகளை <u>விசுவாசித்து</u> வாசித்தால், கிறிஸ்துவை அறிந்துகொள்வீர்கள்.
*(அல்லது)*
இந்த ஜீவனுள்ள வார்த்தைகளை வாசித்து <u>அறிந்துகொண்டால்</u>, கிறிஸ்துவை விசுவாசிப்பீர்கள்.
If you <u>believe</u> and read the Bible, you will understand Christ. (or)
If you read and <u>understand</u> the Bible, you will believe Christ.
***(இரண்டிலும் நீங்கள் செய்யவேண்டியது…வாசிப்பது.)*** ***(In both case, you have to read….)***

சகல பரிபூரணமும் கிறிஸ்துவுக்குள்ளே வாசமாயிருக்கவும், அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் தேவனுக்குப் பிரியமாயிற்று.
(கொலோசெயர் / Colossians 1:19-20)
For it pleased the Father that in Him all the fullness should dwell, and by Him to reconcile all things to Himself, by Him, whether things on earth or things in heaven, having made peace through the blood of His cross. (NKJV)

இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாக இருக்கிற ஜீவனுள்ள வசனத்தை விசுவாசித்து வாசியுங்கள். தியானியுங்கள். சிந்தியுங்கள்.
God's word judges the thoughts and attitudes of our heart. Please believe, read, meditate, think.
நம் ஒவ்வொருவரின் மேலும் பிரியமுள்ள தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.
God who wants to reconcile everyone. God Bless You.
Let us Pray